Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

# தமிழ் மக்கள் குரல்

tamilmakkalkurall@gmail.com

தினசரி காலை நாளிதழ்

RNI No. : TNTAM24840

உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Tamilnadu Association For The Rights of All Types of Differently Abled and Caregivers
Contact :
98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | வியாழக்கிழமை, ஆகஸ்ட் 01, 2024 | இதழ் 110

## 3ருவது நாளாக தொடரும் மீட்புப் பணி வயநாடு பலி எண்ணிக்கை 291 ஆக உயர்வு; மேலும் 460 இடங்களில் நிலச்சரிவு அபாயம். நிலச்சரிவு பகுதிகளை ராகுல், பிரியங்கா பார்வையிட்டனர்



சென்னை, 01 ஆகஸ்ட் 2024: கேரள மாநிலம் வயநாடு பகுதியில் ஏற்பட்ட பயங்கர நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்தோர் எண்ணிக்கை 300-ஐ தாண்டியுள்ளது. நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட முண்டக்கை பகுதியை ராகுல் காந்தி, பிரியங்கா ஆகியோர் நேற்று பார்வையிட்டனர். நிவாரண முகாம்களில் உள்ளவர்களை சந்தித்து ஆறுதல் கூறினர்.

கேரள மாநிலம் வயநாடு மாவட்டத்தில் பெருமழை காரணமாக முண்டக்கை, சூரல்மலை, அட்டமலை, நூல்புழா பகுதிகளில் கடந்த 30-ம் தேதி அதிகாலை பயங்கர நிலச்சரிவு ஏற்பட்டது. இதில், நூற்றுக்கணக்கான வீடுகள் மண்ணில் புதைந்தன. வீடுகள் இருந்த தடயமே தெரியாத அளவுக்கு அப்பகுதி முழுவதும் சேற்று மண்ணால் மூடப்பட்டுள்ளது.

கேரளாவின் வயநாடு மாவட்டத்தில் கனமழை மற்றும் நிலச்சரிவுகள் பேரழிவை ஏற்படுத்தியுள்ளன, 270 பேர் உயிரிழந்துள்ளனர். மேப்பாடி, சூரல்மலை, முண்டகை, அட்டமலை போன்ற பகுதிகளில் நிலச்சரிவு ஏற்பட்டு, வீடுகள், கடைகள் என ஏராளமான கட்டடங்கள் புதைந்தன. இதுவரை 150 உடல் பாகங்கள் மீட்கப்பட்டுள்ள நிலையில், காணாமல் போனவர்களைக் கண்டறியும் பணிகள் நடைபெற்று வருகின்றன. வயநாட்டில் அமைக்கப்பட்டுள்ள நிவாரண முகாம்களில் சுமார் 8,812 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர், மேலும் 1,695 பேர் சூரல்மலை முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இந்திய ராணுவம், பேரிடர் மீட்புப் படை, மாநில தீயணைப்புத் துறை மற்றும் உள்ளூர் தன்னார்வலர்கள் அனைவரும் மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். தமிழ்நாடு, சிக்கிம் மற்றும் பிற மாநிலங்கள் கேரளாவுக்கு தங்கள் ஆதரவை வழங்கியுள்ளன. இருப்பினும், கனமழை மற்றும் நிலச்சரிவு காரணமாக சாலைகள் மற்றும் பாலங்கள் கடுமையாக சேதமடைந்து, மீட்புப் பணிகளுக்கு இடையூறாக உள்ளது. இந்த முயற்சிகளுக்கு வசதியாக இந்திய ராணுவத்தின் பொறியாளர் பிரிவு தற்காலிக பாலங்களை அமைத்து வருகிறது.

கேரள முதல்வர் பினராயி விஜயன் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்டு மீட்பு பணிகளை ஒருங்கிணைத்து வருகிறார். முன்னாள் எம்பி ராகுல் காந்தி மற்றும் அவரது சகோதரி பிரியங்கா காந்தி ஆகியோர் அப்பகுதியில் சேதத்தை மதிப்பீடு செய்து வருகின்றனர். 200க்கும் மேற்பட்ட ராணுவ வீரர்கள் உதவிக்காக நிறுத்தப்பட்டுள்ளனர், விமானப்படையினர் தேடுதல் மற்றும் மீட்பு பணிகளுக்கு உதவியுள்ளனர்.

பேரிடர் மேலாண்மை மற்றும் நிவாரணப் பணிகளை மேற்பார்வையிட சிறப்பு அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். மேலும் கனமழைக்கு வாய்ப்புள்ளதால் பல மாவட்டங்களுக்கு சிவப்பு மற்றும் ஆரஞ்சு எச்சரிக்கையை மத்திய வானிலை ஆய்வு மையம் விடுத்துள்ளது. நிலச்சரிவு சேதத்தை மதிப்பிட ஐந்து அமைச்சர்கள் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு மத்திய அரசு நிதியுதவி அறிவித்துள்ளது. மேலும், தமிழகத்தைச் சேர்ந்த இருவரின் உடல்களை மீட்ட பிறகு தமிழகம் மற்றும் சிக்கிம் நிதி உதவி வழங்குவதாக உறுதியளித்துள்ளன. வயநாடு மாவட்ட பேரிடர் மேலாண்மை குழு இந்த நெருக்கடியின் போது உதவி தேடுபவர்களுக்கு உதவி எண்களை நிறுவியுள்ளது.

கேரள மாநிலத்தில் வயநாடு மட்டுமின்றி இடுக்கி, பாலக்காடு, மலப்புரம் மற்றும் பத்தினம்திட்டா ஆகிய மாவட்டங்களிலும் கடுமையான நிலச்சரிவுஸ்ரீமண்சரிவு ஏற்பட வாய்ப்பு உள்ளதாக கேரள மீன்வளம்ஸ்ரீகடல் அறிவியல் பல்கலைக்கழகம் கண்டறிந்துள்ளது. மாநிலத்தில் 460 பகுதிகளில் நிலச்சரிவு மற்றும் மண் சரிவு ஏற்பட வாய்ப்புள்ளதாக தெரிவித்துள்ளது. கேரள மீன்வளம்-கடல் அறிவியல் பல்கலைக்கழக ஆய்வின்படி 32 இடங்களில் 30 சதவீதத்திற்கு அதிகமாகவும், 76 இடங்களில் 20 சதவீதத்திற்கும் அதிகமாகவும் நிலச்சரிவு ஏற்பட வாய்ப்பு உள்ளது. வயநாட்டில் வைத்திரி, தொண்டர்நாடு பொழுதானா, திருநெல்லி, வெள்ளமுண்டா, தரியோடு, முப்பைநாடு, பதிஞ்சசரதாரா உள்ளிட்ட பகுதிகளில் நிலச்சரிவு அபாய பகுதிகளாக கண்டறியப்பட்டுள்ளது.

கேரள மாநிலத்தில் வயநாடு மட்டுமின்றி இடுக்கி, பாலக்காடு, மலப்புரம் மற்றும் பத்தினம்திட்டா ஆகிய மாவட்டங்களிலும் கடுமையான நிலச்சரிவு மண்சரிவு ஏற்பட வாய்ப்பு உள்ளதாக கேரள மீன்வளம் கடல் அறிவியல் பல்கலைக்கழகம் கண்டறிந்துள்ளது. மாநிலத்தில் 460 பகுதிகளில் நிலச்சரிவு மற்றும் மண் சரிவு ஏற்பட வாய்ப்புள்ளதாக தெரிவித்துள்ளது. கேரள மீன்வளம்-கடல் அறிவியல் பல்கலைக்கழக ஆய்வின்படி 32 இடங்களில் 30 சதவீதத்திற்கு அதிகமாகவும், 76 இடங்களில் 20 சதவீதத்திற்கும் அதிகமாகவும் நிலச்சரிவு ஏற்பட வாய்ப்பு உள்ளது. வயநாட்டில் வைத்திரி, தொண்டர்நாடு பொழுதானா, திருநெல்லி, வெள்ளமுண்டா, தரியோடு, முப்பைநாடு, பதிஞ்சசரதாரா உள்ளிட்ட பகுதிகளில் நிலச்சரிவு அபாய பகுதிகளாக கண்டறியப்பட்டுள்ளது.

இதேபோல் இடுக்கியில் கொக்கையார், மறையூர் உள்பட 20 இடங்களிலும், மலப்புரத்தில் அமரம்பலம், கருளை, சோக்காடு, கருவரக்குண்டு உள்ளிட்ட இடங்களிலும், பாலக்காட்டில் 3 இடங்களிலும், பத்தினம்திட்டா மாவட்டத்தில் அருவாப்புலம், சீத்தாத்தோடு, சித்தார் ஆகிய இடங்களிலும் நிலச்சரிவு ஏற்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஒரே பேராசிரியர் பல கல்லூரிகளில் பணியாற்றுவது போல் மோசடி மோசடி செய்த பொறியியல் கல்லூரிகளின் அங்கீகாரம் ரத்து: பேராசிரியர்கள் தொடர்ந்து பணியாற்றத் தடை அண்ணா பல்கலைக்கழக துணைவேந்தர் வேல்ராஜ் தகவல்

சென்னை, 01 ஆகஸ்ட் 2024: மோசடி செய்த பொறியியல் கல்லூரிகள் அங்கீகாரம் ரத்து செய்யப்படும் என்றும் பேராசிரியர்கள் தொடர்ந்து பணியாற்ற தடை விதிக்கப்படும் என்றும் அண்ணா பல்கலைக் கழக துணைவேந்தர் வேல்ராஜ் கூறினார்.

அண்ணா பல்கலைக் கழகத்தின் கீழ் உள்ள என்ஜினீயரிங் கல்லூரிகள் ஒவ்வொரு ஆண்டும் தங்கள் அங்கீகாரம் மற்றும் இணைப்பு சான்றிதழை புதுப்பிக்க வேண்டும். இதற்கு உள்கட்டமைப்பு பேராசிரியர்கள், பணியாளர்கள் விவரங்களை தாக்கல் செய்ய வேண்டும். இவற்றை அகில இந்திய தொழில்நுட்ப கல்வி கவுன்சிலான ஏ.ஐ.சி.டி.இ. மற்றும் அண்ணா பல்கலைக் கழக குழுவினர் ஆய்வு செய்து அனுமதி அளிப்பார்கள்.




இந்த நிலையில் என்ஜினீயரிங் கல்லூரிகளில் மொத்தம் உள்ள 52 ஆயிரத்து 500 பேராசிரியர்களில் 1,900 காலி இடங்கள் இருந்த நிலையில், அதை சரிகட்ட ஒரே பேராசிரியர் பல கல்லூரிகளில் தில்லுமுல்லு செய்து வேலை பார்த்து வந்தது தெரியவந்துள்ளது. இது தொடர்பாக அறப்போர் இயக்கம் எழுப்பிய குற்றச்சாட்டை வைத்து அண்ணா பல்கலைக்கழகம் நடத்திய விசாரணையில் இந்த ஆண்டு இணைப்புச் சான்றிதழ் பெற்ற கல்லூரிகளை சேர்ந்த 180-க்கும் மேற்பட்ட பேராசிரியர்கள், பல என்ஜினீயரிங் கல்லூரிகளில் போலி ஆதார் அட்டையை சமர்ப்பித்து முறைகேடாக பணி புரிந்தது போல் கணக்கு காட்டி இருப்பதை கண்டுபிடித்தனர்.

இந்த விவகாரம் விசுவரூபம் எடுத்த நிலையில் பேராசிரியர் நியமன விவகாரம் குறித்து விரிவான தகவல் அளிக்குமாறு, கவர்னர் ஆர்.என்.ரவி விளக்கம் கேட்டிருந்தார். உயர் கல்வித்துறையும் துணை வேந்தரிடம் விளக்கம் கேட்டுள்ளது. இதைத்தொடர்ந்து 3 பேர் கொண்ட குழுவை அரசு அமைத்துள்ளது. இதற்கிடையே அண்ணா பல்கலைக்கழகம் தனது ஆரம்பக்கட்ட விசாரணையில் கிடைத்த தகவல்களை அறிக்கையாக தயாரித்து பல்கலைக்கழக வேந்தராக உள்ள கவர்னருக்கு சமர்ப்பித்துள்ளது. அண்ணா பல்கலைக்கழக துணைவேந்தர் வேல்ராஜ் செய்தியாளர்களிடம் கூறியதாவது:




போலி பேராசிரியர்கள் மூலம் மோசடி செய்த பொறியியல் கல்லூரிகள் அங்கீகாரம் ரத்து செய்யப்படும். போலி பேராசிரியர்கள் மூலம் மோசடியில் ஈடுபட்டதாக 295 பொறியியல் கல்லூரிகள் சிக்கி உள்ளன. விளக்கம் கேட்டு 180 பொறியியல் கல்லூரிகளுக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது. உரிய விளக்கம் அளிக்காத பொறியியல் கல்லூரிகளின் அங்கீகாரத்தை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். போலி பேராசிரியர்கள் மூலம் மோசடி செய்த பொறியியல் கல்லூரிகள் அங்கீகாரம் ரத்து செய்யப்படும். மோசடியில் ஈடுபட்டுள்ளதாக 972 பேராசிரியர்கள் முதற்கட்டமாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். ஒரே பேராசிரியர் பல்வேறு பொறியியல் கல்லூரிகளில் பணியாற்றுவது போல் மோசடி செய்துள்ளனர். மோசடியில் ஈடுபட்ட பேராசிரியர்கள் தொடர்ந்து பணியாற்ற தடை விதிக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

# வடிவேலுவுக்கு இம்சை அரசன் யோகி பாபுவுக்கு போட் யோகி பாபு, கௌரி கிஷன், எம்.எஸ். பாஸ்கர் நடிப்பில் ஜிப்ரான் இசையில் சிம்புதேவன் இயக்கம்



சென்னை, 01 ஆகஸ்ட் 2024: இயக்குநர் ஷங்கர் தயாரிப்பில் சிம்புதேவன் இயக்கிய இம்சை அரசன் 23ம் புலிகேசி அறை எண் 305ல் கடவுள் திரைப்படங்களின் மிகப்பெரிய வெற்றியை தொடர்ந்துபோட். வடிவேலுவுக்கு இம்சை அரசன் படம் வெற்றிப் படமாக அமைந்தது போல யோகி பாபுவுக்கு இந்த படம்.

போட் கதை: 1943ம் ஆண்டு மெட்ராஸ் மாகாணத்தில் இந்த படத்தின் கதை அமைகிறது. இரண்டாம் உலகப் போர் ஒருபுறம், சுதந்திரப் போராட்டம் இன்னொருபுறம் இதில் கடற்கரை அருகே உள்ள முகாமை நோக்கி ஜப்பானிய விமானப்படை குண்டு போடப்போறாங்க என ஒரு தகவல் தீயாக பரவ அங்கே இருந்து தனது பாட்டியுடன் குமரன் (யோகி பாபு) தனது படகில் ஏறி கடலுக்குள் சென்று விட்டால் நிலத்தில் தான் குண்டு போடுவார்கள் தப்பித்துக் கொள்ளலாம் என நினைக்கிறார். அவருடன் மேலும், சிலர் அந்த படகில் ஏறிக் கொள்கின்றனர். ஆனால், அணுகுண்டை விட மனிதனின் சுயநலம் எவ்வளவு பெரிய கொடுரமானது என்பது அந்த படகு பயணத்தில் தெரிய வருவது தான் போட் படத்தின் கதை.

அரசியல் நய்யாண்டி: இம்சை அரசன் படத்திலேயே ஓவியம், அந்தப்புறம், மல்யுத்த போட்டி, அக்காமாலா, கப்சி, ஆங்கிலேயர்களுடன் இணைந்துக் கொண்டு இந்தியாவுக்கு எதிராக சதி செய்த அரச குடும்பத்தினர் உள்ளிட்ட பல விஷயங்களை அடுக்கி வைத்திருப்பார் சிம்புதேவன். அதே போல 1943ல் நடக்கும் கதைக்களமாக இந்த படத்தை எடுத்துக் கொண்டு சாதி, மத பாகுபாடு, இன்றைய அரசியல் சூழலில் நிலவும் பிரச்சனை உள்ளிட்டவற்றை அரசியல் நய்யாண்டியுடன் கையாண்டு இருக்கும் விதம் தான் இந்த படத்தை ரசிக்க வைக்கிறது.

யோகி பாபு படகோட்டியாக அசத்தலாக நடித்துள்ளார். அவரை தொடர்ந்து நூலகராக நடித்துள்ள எம்.எஸ். பாஸ்கர் ஸ்கோர் செய்கிறார். ஹீரோயினாக கௌரி கிஷன் அந்த கானா கர்நாடக சங்கீதம் பாடலில் ஸ்கோர் செய்து விட்டார். சாம்ஸ், ஷாரா, ஆங்கிலேய அதிகாரியாக நடித்துள்ள ஜெஸ்ஸி ஃபாக்ஸ் ஆலன், சின்னி ஜெயந்த், மதுமிதா மற்றும் லீலா என ஒவ்வொரு கதாபாத்திரத்திற்கும் ஆளமான பின் கதையை அமைத்தும் அவர்களுக்கு எழுதப்பட்ட வசனங்களும் தான் இந்த படத்தின் மிகப்பெரிய பலமே. படகில் கடலுக்குள் நடக்கும் கதை என்பதால் போர் அடித்து விடாமல் இருக்கும் அளவுக்கு ஜிப்ரான் பின்னணி இசையில் பிரித்து மேய்ந்துள்ளார். நீலக்கடலையும் இயற்கை அழகையும் மனிதர்களின் வெறுப்புணர்வையும் படம் பிடித்து காட்டியதில் ஒளிப்பதிவாளர் மாதேஷ் மாணிக்கத்தின் உழைப்பும் பாராட்டுக்குரியது.

படத்தை சுவாரஸ்யமாகக் கொண்டு சென்று தீவிரவாதி யார் என்கிற ட்விஸ்ட்டும் படகில் இருந்தவர்கள் என்ன ஆனார்கள் என்கிற பரபரப்பையும் கொடுத்த விதத்தில் இந்த 'போட்' பாராட்டுக்களை பெறுகிறது.

# தீரன் நடிக்கும் 'சாலா' டிரைலரை அல்லு அர்ஜுன் வெளியிடுகிறார்

சென்னை, 01 ஆகஸ்ட் 2024: பீப்பிள் மீடியா ஃபேக்டரி டி.ஜி. விஷ்வபிரசாத் தயாரிப்பில் விவேக் குச்சிபொட்லா இணை தயாரிப்பில் 'சாலா'; எஸ்.டி. மணிபால் இயக்கத்தில் வட சென்னையில் உள்ள பிரபல மதுபானக் கூடத்திற்காக இரண்டு துருவங்கள் மோதிக் கொள்ளும் விறுவிறுப்பான திரைப்படம்



உலகெங்கும் உள்ள திரையரங்குகளில் ஆகஸ்ட் 23 சாலா வெளியாகிறது

தெலுங்கு திரையுலகில் முன்னணி தயாரிப்பு நிறுவனமான பீப்பிள் மீடியா ஃபேக்டரி, 'சாலா' எனும் நேரடி தமிழ் படத்தை பிரம்மாண்டமாக தயாரித்துள்ளது. டி.ஜி. விஷ்வபிரசாத் தயாரிப்பில், விவேக் குச்சிபொட்லா இணை தயாரிப்பில் அறிமுக இயக்குநர் எஸ்.டி. மணிபால் இயக்கத்தில் உருவாகியுள்ள இத்திரைப்படம் வட சென்னையில் உள்ள பிரபல மதுபானக் கூடத்திற்காக இரண்டு துருவங்கள் மோதிக் கொள்ளும் போராட்டத்தை விறுவிறுப்பு குறையாமல் விவரிக்க உள்ளது.

சமீபத்தில் வெளியாக இப்படத்தின் முதல் பார்வை பெரும் வரவேற்பை பெற்றதையடுத்து 'சாலா' டிரைலரை ஆகஸ்ட் 3 அன்று ஐகான் ஸ்டார் அல்லு அர்ஜுன் வெளியிடுகிறார். இதை தொடர்ந்து, உலகெங்கும் உள்ள திரையரங்குகளில் ஆகஸ்ட் 23 'சாலா' வெளியாகிறது

'சாலா' படத்தில் தீரன் (அறிமுகம்), ரேஷ்மா வெங்கடேசன் (அறிமுகம்), 'மெட்ராஸ்' புகழ் சார்லஸ் வினோத், அருள்தாஸ், ஸ்ரீநாத், சம்பத் ராம், மற்றும் ஐடி அரசன் உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். 'சாலா' படப்பிடிப்பு நிறைவடைந்து சென்சாரில் யு/ஏ சான்றிதழ் வாங்கி தமிழ் மற்றும் தெலுங்கு மொழிகளில் திரையரங்கு வெளியீட்டுக்கு தயாராகி வருகிறது.

திரைப்படம் குறித்து பேசிய இயக்குநர் மணிபால், "வட சென்னையின் முக்கிய பகுதியில் அமைந்துள்ள ஒரு மதுபானக் கூடம் (பார்) தான் 'சாலா' படத்தின் மையக்கரு. இந்த பாரை கைப்பற்ற சக்தி வாய்ந்த இரு குழுக்களுக்கு இடையே கடும் போட்டி நிலவுகிறது. இதற்கிடையே, மதுக்கடையே இருக்கக் கூடாது என்று பெண் ஆசிரியர் ஒருவர் கடும் போராட்டத்தை முன்னெடுக்கிறார். இந்த மூன்று தரப்புக்கு இடையே நடக்கும் மோதல்களை காரமும் சாரமும் குறையாமல் திரையில் கொண்டு வந்திருக்கிறோம்," என்றார்.

இயக்குநர் பிரபு சாலமனிடம் இணை இயக்குநராக பணியாற்றிய அனுபவமுள்ள மணிபால் மேலும் கூறுகையில், "வட சென்னை எனக்கு மிகவும் பிடித்த பகுதி. அங்குள்ள மக்களை பற்றியும், அவர்களது வாழ்க்கை குறித்தும் சினிமாவில் பதிவு செய்ய வேண்டும் என்ற ஆசை எனது முதல் படத்திலேயே நிறைவேறி உள்ளது மிக்க மகிழ்ச்சி. வட சென்னை மக்கள் மட்டுமில்லாமல், அனைத்து ரசிகர்களாலும் 'சாலா' பாராட்டப்படும் என நம்புகிறேன்," என்றார்.

'சாலா' திரைப்படத்திற்கு கிரியேட்டிவ் தயாரிப்பாளராக வி. ஸ்ரீ நடராஜும், நிர்வாக தயாரிப்பாளராக விஜயா ராஜேஷும் பங்காற்றியுள்ளனர். ரவீந்திரநாத் குரு ஒளிப்பதிவு செய்ய, தீசன் இசை அமைத்துள்ளார். கலை இயக்கத்தை வைரபாலன் கவனிக்க, படத்தொகுப்பை புவன், சண்டை பயிற்சியை மகேஷ் மேத்யூ மற்றும் ரக்கர் ராம், நடன இயக்கத்தை நோபுள் கையாண்டுள்ளனர். சவுண்ட் மிக்ஸிங்: லட்சுமி நாராயணன். அந்தோணி தாசன் மற்றும் சைந்தவி பாடல்களை பாடியுள்ளனர். புரொடக்ஷன் எக்சிக்கியூட்டிவ்: வி கே துரைசாமி

ஆகஸ்ட் 23 அன்று பீப்பிள் மீடியா ஃபேக்டரி டி.ஜி. விஷ்வபிரசாத் தயாரிப்பில், விவேக் குச்சிபொட்லா இணை தயாரிப்பில், எஸ்.டி. மணிபால் இயக்கத்தில் உருவாகியுள்ள 'சாலா' திரையரங்குகளில் வெளியாகிறது.

# அருந்ததியர்களுக்கு உள்ஒதுக்கீடு வழங்கத் தடை இல்லை: சுப்ரீம் கோர்ட் அதிரடி தீர்ப்பு

சென்னை, 01 ஆகஸ்ட் 2024: எஸ்.சி., எஸ்.டி., பிரிவினருக்கான இடஒதுக்கீட்டில் உள் ஒதுக்கீடு வழங்கக்கூடாது என்ற தீர்ப்பை ரத்து செய்த சுப்ரீம் கோர்ட், அருந்ததியர் உள் ஒதுக்கீடு தொடர்பான தமிழக அரசின் சட்டம் செல்லும் என தீர்ப்பளித்தது.

தமிழ்நாட்டில் எஸ்.சி., எஸ்.டி., பிரிவினருக்கான இடஒதுக்கீட்டில் அருந்ததியருக்கான உள் ஒதுக்கீட்டிற்கு எதிராக சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கு 7 நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்வில் இன்று விசாரணைக்கு வந்தது. அப்போது மத்திய அரசு தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், "இட ஒதுக்கீட்டின் நோக்கத்தை, உள்ஒதுக்கீடு அடுத்த கட்டத்துக்கு எடுத்து செல்கிறது. நூற்றாண்டுகளாக ஒடுக்குமுறைகளை எதிர்கொண்டு வரும் சமூகங்களுக்கு சம வாய்ப்பை அளிக்க உள் ஒதுக்கீடு வகை செய்கிறது'' எனக் கூறினார்.

இதனையடுத்து 2005ல் 5 நீதிபதிகள் கொண்ட அமர்வு வழங்கிய தீர்ப்பை ரத்து செய்த சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள், அரசியல் சட்டத்தின் 14வது பிரிவை உள் ஒதுக்கீடு மீறவில்லை. பட்டியலின உட்பிரிவுகள் எதுவும் 'பட்டியல் வகுப்பினர்' என்ற வரையறையில் இருந்து விலக்கப்படாத காரணத்தால் உள் ஒதுக்கீடு வழங்கலாம் என்றும் பட்டியலினத்தவர்களுக்கு உள் ஒதுக்கீடு வழங்க எந்த தடையும் இல்லை என்றும் 7 நீதிபதிகள் அமர்வில் 6 நீதிபதிகள் ஒருமித்த தீர்ப்பு வழங்கினர். நீதிபதி பேலா திரிவேதி மட்டும் மாறுபட்ட தீர்ப்பு வழங்கினார்.

பட்டியலின, பழங்குடியினருக்கான உள்ஒதுக்கீட்டை மாநில அரசுகள் வழங்க முடியும் என்று அருந்ததியர் உள் இட ஒதுக்கீடு தொடர்பான தமிழக அரசின் சட்டம் செல்லும் என்று நீதிபதிகள் தீர்ப்பளித்தனர்.

மேலும் அரசு வேலைவாய்ப்புகளில் பட்டியலின பிரிவினருக்கான இடஒதுக்கீட்டில் வால்மீகி மற்றும் மழாபி சீக்கிய சமூகத்தினருக்கு 50% உள்ஒதுக்கீடு வழங்க வகை செய்யும் விதமாக பஞ்சாப் மாநில அரசு கொண்டு வந்த சட்டமும் செல்லும் என்று நீதிபதிகள் தெரிவித்தனர்.



தூத்துக்குடி மாவட்டம் கிள்ளிக்குளம் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் இன்று (01.08.2024) நிதித்துறை சார்பில் நேரடி நியமன தமிழ்நாடு அரசு தணிக்கையாளர்களுக்கான அடிப்படைப் பயிற்சியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கோ.லட்சுமிபதி, இ.ஆ.ப., அவர்கள் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார்.









"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

# இண்டியாமார்ட் இன்டர்மெஷ் லிமிடெட் 17% வருவாய் வளர்ச்சியோடு வலுவான கியூ1 எஃப் ஒய்2025 ஃபைனான்ஷியல் ரிஸல்டுகளை அறிவிக்கிறது

சென்னை, 01 ஆகஸ்ட் 2024: இண்டியாமார்ட் இன்டர்மெஷ் லிமிடெட் ( "இண்டியாமார்ட்" அல்லது "த கம்பெனி" என்று குறிப்பிடப்படுகிறது) அது ஜூன் 30, 2024 அன்றுடன் முடியும் முதல் காலாண்டுக்கான தனது ஃபைனான்ஷியல் ரிஸல்டுகளை இன்று அறிவித்தது .



ஒருங்கிணைந்த நிதி சிறப்பம்சங்கள் (கியூ1 எஃப் ஒய் 2025): கடந்த ஆண்டின் தொடர்புடைய காலாண்டின் ரூ.282 கோடியுடன் ஒப்பிடும்போது ஆப்பரேஷன்களிலிருந்து ரூ.331 கோடி ஒருங்கிணைந்த வருவாயை இண்டியாமார்ட் தெரிவித்துள்ளது, அது 17% வளர்ச்சியை பிரதிபலிக்கிறது. இதில் இண்டியாமார்ட் ஸ்டாண்ட்அலோன் வருவாய் ரூ.315 கோடி மற்றும் பிஸி இன்ஃபோடெக் வருவாயாக ரூ.15 கோடியும் உள்ளடங்கும். ஒய் ஓ ஒய் அடிப்படையில் இது முறையே 18% மற்றும் 15% வளர்ச்சியை பதிவு செய்துள்ளது

வாடிக்கையாளர்களிடமிருந்து கலெக்ஷன், காலாண்டுக்கு ரூ. 366 கோடியாக 14% ஆக வளர்ச்சியடைந் துள்ளது. இதில் முதன்மையாக ரூ.341 கோடி ஸ்டாண்ட்அலோன் கலெக்ஷன்கள் மற்றும் ரூ.24 கோடிக்கான பிஸி இன்ஃபோடெக் கலெக்ஷன்களும் உள்ளடங்கும்.

ஜூன் 30, 2024-ன்படி ஒத்திவைக்கப்பட்ட வருவாய் ரூ.1,474 கோடியாக அதிகரித்து அது ஒய் ஓ ஒய் எனும் ஆண்டுக்கு ஆண்டு 23% ஐ பிரதிபலிக்கிறது. இதற்கு முதன்மையாக, இண்டியாமார்ட் ஸ்டாண்ட்அலோன் ஒத்திவைக்கப்பட்ட வருவாய் ரூ.1,421 கோடி மற்றும் பிஸி இன்ஃபோடெக் வருவாய் ரூ.51 கோடியும் உள்ளடங்கும்.

காலாண்டுக்கான நிகர லாபம் ரூ.114 கோடியாக இருந்து அது 30% மார்ஜினை பிரதிபலிக்கிறது. ஆப்பரேஷன்களிலிருந்து காலாண்டுக்கான பணப்புழக்கம் ரூ.136 கோடியாக இருந்தது. கேஷ் மற்றும் முதலீட்டு பேலன்ஸ் ஜூன் 30, 2024 தேதியின்படி ரூ.2,319 கோடியாக இருந்தது.

ஸ்டாண்ட்அலோன் எனும் முழுமையான நிதி சிறப்பம்சங்கள் (கியூ1 எஃப் ஒய்2025): ஆப்பரேஷன்களிலிருந்து முழுமையான வருவாய், கடந்த ஆண்டின் ரூ.268 கோடி ரூபாயுடன் ஒப்பிடும்போது, ரூ.315 கோடியாக அதிகரித்து அது 18%-ஐ பிரதிபலிக்கிறது. இந்த வளர்ச்சியானது, பணம் செலுத்தும் ஸப்ளையர்களிடமிருந்து ரியலைஸேஷனில் 13%-க்கும் அதிக மேம்பாடு மற்றும் மீதி, பணம் செலுத்தும் ஸப்ளையர்களின் எண்ணிக்கை அதிகரித்ததால் முதன்மையாக உந்தப்பட்டது.

வாடிக்கையாளர்களிடமிருந்து கலெக்ஷன் காலாண்டுக்கு ரூ.341 கோடியாக அதிகரித்தது மற்றும் ஒத்திவைக்கப்பட்ட வருவாய் ஜூன் 30, 2024-ன்படி ரூ.1,421 கோடியாக அதிகரித்து அது ஆண்டுக்கு ஆண்டு 22% வளர்ச்சியை பிரதிபலிக்கிறது.

காலாண்டுக்கான இபிட்டா ரூ.117 கோடியாக இருந்து அது 37% மார்ஜினை பிரதிபலிக்கிறது. காலாண்டுக்கான நிகர லாபம் ரூ.124 கோடியாகி அது 34% மார்ஜினை பிரதிபலிக்கிறது.

ஆப்பரேஷனல் சிறப்பம்சங்கள் (கியூ4 எஃப் ஒய்2024): இண்டியாமார்ட், கியூ4 எஃப் ஒய்25-ல் 25 மில்லியன் தனித்துவமான பிஸ்னஸ் விசாரிப்புகளை பதிவு செய்திருக்கிறது, அது ஆண்டுக்கு ஆண்டு 15% வளர்ச்சியை பிரதிபலிக்கிறது. ஸப்ளையர்களின் ஸ்டோர்ஃப்ரன்ட்ஸ் 8 மில்லியனாக அதிகரித்தது அது ஒய் ஓ ஒய் 5% அதிகரிப்பாகும் மற்றும் பணம் செலுத்தும் ஸப்ளையர்கள் 216கே-வாக அதிகரித்து அது காலாண்டின்போது நிகர சேர்க்கையாக 1.5கே ஸப்ஸ்க்ரைபர்களை பிரதிபலிக்கிறது.

மேற்கொண்டு காலாண்டின்போது இண்டியாமார்ட் 'எம்/எஸ் பல்டார் டெக்னாலஜீஸ் பிரைவேட் லிமிடெடில்' ("ஐ டி எஃப் ஒய்") 10% பங்கை கையகப்படுத்துவதற்கான ஒப்பந்தத்தில் ஈடுபட்டது. ஓர் ஒருங்கிணைக்கப்பட்ட ஐடன்டிடி பிளாட்ஃபார்மான அது கேஒய்சி, பேக்கிரவுண்ட் வெரிஃபிகேஷன்ஸ், ஆபத்து தணிப்பு, டிஜிட்டல் ஆன்போர்டிங் மற்றும் டிஜிட்டல் பிரைவஸிக்கு புராடக்டுகளையும், தீர்வுகளையும் வழங்குகிறது.

இந்த சீரிய செயல்பாட்டை குறித்து பேசுகையில் திரு. தினேஷ் அகர்வால், சீஃப் எக்ஸிக்யூடிவ் ஆஃபீசர் இவ்வாறு கூறினார்:

வருவாயில் சீரான வளர்ச்சி மற்றும் ஒத்திவைப்பு வருவாய், அதோடு ஆப்பரேடிங் மார்ஜின்களில் விரிவாக்கத்தோடு நிதியாண்டை தெளிவான, நேர்மறையான குறிப்புடன் தொடங்குவது குறித்து நாங்கள் பெருமகிழ்ச்சியடைகிறோம். வலுவான பேலன்ஸ் ஷீட் நீடித்து நிலைக்கும் பணப்புழக்கத்தின் பின்னணியில் எங்கள் வேல்யூ விகிதாச்சாரங்களை மேற்கொண்டு வலுப்படுத்த தொடர்ந்து முதலீடு செய்து அதன் மூலம் வாடிக்கையாளர்களின் அனுபவத்தை மேம்படுத்தி வளர்ச்சி வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்வோம். தங்களை வளர்த்துக் கொள்ளமென்மேலும் அதிக பிஸ்னஸ்கள் இன்டர்நெட்டை ஏற்றுக்கொள்ளும் நிலையில் நாங்கள் நீடித்து நிலைக்கும் லாபகரமான வளர்ச்சியை உறுதியாக நம்புகிறோம்.

# வாரண்டுகள் ஒதுக்கீடு செயல்திட்டத்திற்கு சர்வேஷ்வர் ஃபுட்ஸ் லிமிடெட்-ன் இயக்குநர்கள் குழு ஒப்புதல்

சென்னை, 01 ஆகஸ்ட் 2024: சர்வேஷ்வர் ஃபுட்ஸ் லிமிடெட், பிராண்டட் மற்றும் பிராண்டட் அல்லாத பாஸ்மதி மற்றும் பாஸ்மதி அல்லாத அரிசி மற்றும் பிற பொருட்களை உற்பத்தி, வர்த்தகம், பதப்படுத்துதல் மற்றும் சந்தைப்படுத்துதல் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள ஒரு பெருநிறுவனமாகும். புரொமோட்டர் மற்றும் புரொமோட்டர் அல்லாத நபர்கள்/பொது குழு நிறுவனங்கள் என பலதரப்பினருக்கும் முன்னுரிமை அடிப்படையில் மாற்றத்தக்க வாரண்டுகள் ஒதுக்கீடு செய்யும் திட்டத்திற்கு நிறுவனத்தின் இயக்குநர்கள் குழு ஒப்புதல் அளித்திருப்பதை இந்நிறுவனம் அறிவித்திருக்கிறது. எஃப் பி ஐ நோவா குளோபல் ஆப்பர்சூனிட்டிஸ் ஃபண்டு, பி சி சி-டச்ஸ்டோன் ஆகியவை ஒதுக்கீடு பெறும் நிறுவனங்களுள் சிலவாகும்.




சமீபத்தில், நிலைப்புத்தன்மையுள்ள விவசாய நடைமுறைகளை புரட்சிகரமாக மாற்றுவதற்காக பூமித்ரா ஓ2சி டெக் இந்தியா என்ற நிறுவனத்துடன் ஒரு கூட்டாண்மை ஒப்பந்தத்தை இந்நிறுவனம் மேற்கொண்டது. சர்வேஷ்வர் ஃபுட்ஸ் லிமிடெட் - க்காக கார்பன் கிரெடிட்களை விற்பனை செய்வதன் மூலம் உற்பத்தித்திறனை அதிகரிப்பது, மண்ணின் ஆரோக்கியத்தை மேம்படுத்துவது மற்றும் வருமானம் ஈட்டுவது ஆகியவையும் இந்த முக்கியமான ஒப்பந்தத்தின் நோக்கமாகும். மேலும், சர்வேஷ்வர் ஃபுட்ஸ் லிமிடெட் உடன் தொடர்புடைய, 45,000 ஏக்கர் பரப்பளவில் விவசாயத்தை மேற்கொள்ளும் 17,000+ விவசாயிகளுக்கு பயனளிப்பதாக இந்த கூட்டாண்மை ஒப்பந்தம் இருக்கும்.

நிலைப்புத்தன்மையுள்ள விவசாயம் என்ற இலக்கை நோக்கிய குறிப்பிடத்தக்க முன்னேற்றமாக இக்கூட்டாண்மை ஒப்பந்தம் அமைகிறது. மண் கார்பன் சந்தையில் முன்னணியில் இருக்கும் பூமித்ரா, சர்வேஷ்வர் ஃபுட்ஸ் லிமிடெட் நிறுவனத்துடன் தொடர்புடைய விவசாயிகளுக்கு மீளுருவாக்கம் செய்யும் விவசாய நடைமுறைகளை மேற்கொள்ள உதவுவதற்காக அதன் நிபுணத்துவத்தை வழங்கும் நிலைப்புத்தன்மையுள்ள இயற்கை விவசாயத்தை ஊக்குவிப்பதன் மூலம், உற்பத்தித்திறனை மேம்படுத்துதல், மண்ணின் ஆரோக்கியத்தை மேம்படுத்துதல், கார்பன் அடிச்சுவட்டைக் குறைத்தல் மற்றும் விவசாயிகளுக்கு கூடுதல் வருவாயை ஈட்டும் திறனை வழங்குதல் ஆகியவை இந்த முன்னெடுப்பு திட்டத்தின் நோக்கமாகும். விவசாயிகளும் மற்றும் சர்வேஷ்வர் ஃபுட்ஸ் லிமிடெட் - ம், ஜி எச் ஜி குறைப்பு முயற்சிகளால் உருவாக்கப்படுகின்ற கார்பன் கிரெடிட்களை விற்பனை செய்வதன் மூலம் கூடுதல் வருவாயை பெறுவார்கள். சுற்றுச்சூழல் நிலைப்புத்தன்மை, விவசாயிகளின் பொருளாதார மேம்பாடு மற்றும் இந்தியாவில் மீளுருவாக்கம் செய்யும் விவசாய நடைமுறைகளை ஊக்குவிப்பது ஆகிய குறிக்கோள்கள் மீது சர்வேஷ்வர் ஃபுட்ஸ் லிமிடெட் மற்றும் பூமித்ரா ஆகியவற்றின் ஒருங்கிணைந்த அர்ப்பணிப்பையும், பொறுப்புறுதியையும் இந்த கூட்டுவகிப்பு நடவடிக்கை எடுத்துக்காட்டுகிறது.

பூமித்ரா என்பது, சர்வதேச அளவில் இயங்கும் ஒரு முன்னணி மண் கார்பன் சந்தையாகும். செயற்கை நுண்ணறிவு (ஏஐ) மற்றும் தொலைதூர உணர்திறன் தொழில்நுட்பத்தால் செயல்படுத்தப்படும் இத்தளம், விவசாய நடைமுறைகளை மேம்படுத்தவும், புதிய வழிமுறைகளின் மூலம் வருவாய் ஈட்டவும் மற்றும் செழிப்பானதாக இந்த பூமி கிரகத்தை உருவாக்கவும் விவசாயிகள் மற்றும் பண்ணையாளர்கள் திறனதிகாரம் பெறுவதை பூமித்ரா ஏதுவாக்குகிறது. கார்பன் கிரெடிட்களை உலகெங்கிலும் உள்ள பெருநிறுவனங்கள் மற்றும் அரசாங்கங்களுக்கு பூமித்ரா விற்பனை செய்கிறது; இதன் வழியாக, அவர்களின் நிலைப்புத்தன்மை இலக்குகளை எட்டுவதற்கு அவர்களுக்கு உதவுகிறது. விற்கப்படும் ஒவ்வொரு கார்பன் கிரெடிட்டிலிருந்தும் கிடைக்கும் வருமானத்தின் பெரும்பகுதி விவசாயிகளுக்கு நேரடியாக வழங்கப்படுகிறது. இதனால் அவர்கள் தங்கள் மீதும் மற்றும் தங்களது சமூகங்களிலும் மறுமுதலீடு செய்ய இது வகை செய்கிறது. 5 மில்லியன் + ஏக்கருக்கும் அதிகமான நிலங்களை தனது மேலாண்மையின் கீழ் கொண்டிருக்கும் பூமித்ரா, விவசாயிகள் மற்றும் பண்ணையாளர்களுடன் இணைந்து ஜிகாடன் அளவில் கார்பன் அகற்றுதல் நடவடிக்கையை துரிதப்படுத்துகிறது; அதேசமயம் வேளாண் விளைபொருட்களை குறைவான செலவில் அதிகம் உற்பத்திசெய்ய அவர்களுக்கு உதவுகிறது.

# ராமேஸ்வரம் மீனவர்கள் படகில் கப்பலை மோதவிட்டு மூழ்கடித்த இலங்கை கடற்படை: ஒரு மீனவர் பலி மேலும் 3 பேரை தேடும் பணி தீவிரம்

சென்னை, 01 ஆகஸ்ட் 2024: இலங்கை கடற்படை கப்பல் மோதியதில் கடலில் மூழ்கி ராமேஸ்வரம் மீனவர் ஒருவர் உயிரிழந்தார். மேலும் 3 பேரை தேடும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

ராமநாதபுரம் மாவட்டம் ராமேசுவரம், மண்டபம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து தினமும் 300-க்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்க சென்று வருகிறார்கள். அவ்வாறு கடலுக்கு செல்லும் மீனவர்கள் இலங்கை கடற்படையின் கெடுபிடியால் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

இந்திய கடல் எல்லையில் மீன்பிடித்தபோதும், எல்லை தாண்டி வந்ததாக கூறி அவர்களை விரட்டியடிக்கும் இலங்கை கடற்படை வீரர்கள், சில சமயங்களில் கொடூர தாக்குதலிலும் ஈடுபடுகின்றனர். அதேபோல் தமிழக மீனவர்களின் படகுகளையும் பறிமுதல் செய்து, மீனவர்களையும் சிறை பிடித்து செல்கிறார்கள்.

இந்தநிலையில் ராமேசுவரம் மீன்பிடி துறைமுகத்தில் இருந்து நேற்று 397 விசைப் படகுகள் மீன்பிடி அனுமதி சீட்டு பெற்று மீன்பிடிக்க கடலுக்கு சென்றன. அதில் சுமார் 10-க்கும் மேற்பட்ட விசைப்படகு மீனவர்கள் நள்ளிரவில் இந்திய கடல் எல்லை பகுதியில் வலைகளை விரித்து மீன்பிடித் துக்கொண்டு இருந்தனர். அப்போது திடீரென்று அங்கு இலங்கை கடற்படைக்கு சொந்தமான ரோந்து கப்பல் ஒன்று மின்னல் வேகத்தில் மீனவர்களின் படகுகளை நோக்கி வந்தது. அந்த கப்பலில் ரோந்து பணியில் இருந்த இலங்கை கடற்படையினர், ஒலிபெருக்கி மூலம் இது இலங்கை கடற்பரப்பு. இந்த பகுதியில் நீங்கள் மீன் பிடிக்க கூடாது. மீறினால் கைது செய்யப்படுவீர்கள் என்று எச்சரித்துள்ளனர்.

இதையடுத்து கடலில் விரித்திருந்த வலைகளை சுருட்டிக்கொண்டு மீனவர்கள் புறப்பட தயாரானார்கள். மேலும் இலங்கை கடற்படையினரின் கைது நடவடிக்கைக்கு பயந்து ராமேசுவரம் விசைப்படகு மீனவர்கள் கரைக்கு திரும்ப முயன்றனர். அப்போது கார்த்திகேயன் என்பவரின் விசைப்படகு மீது இலங்கை கடற்படையினர் தங்களது ரோந்து கப்பலை கொண்டு வேகமாக மோதினர்.

இதில் நிலைகுலைந்த மீனவர்களின் விசைப்படகு நடுக்கடலில் மூழ்கியது. உடனடியாக வேறு வழியின்றி படகில் இருந்த மீனவர்கள் மூக்கையா, முனியசாமி, ராமச்சந்திரன், முத்து முனியாண்டி ஆகிய நான்கு பேரும் உயிர் பிழைப்பதற்காக கடலில் குதித்தனர். பின்னர் இலங்கை கடற்படை கப்பல் அங்கிருந்து சென்றுவிட்டது.

இதற்கிடையே சற்று தொலைவில் மற்ற படகுகளில் மீன் பிடித்தவர்கள் இதைப்பார்த்து அதிர்ச்சி அடைந்தனர். அவர்கள் உடனடியாக அந்த பகுதிக்கு சென்று பார்த்தபோது படகு மூழ்கியிருந்தது. கடலில் குதித்த மீனவர்களை தேடியும் கண்டுபிடிக்க முடியவில்லை. மேலும் இதுகுறித்து படகின் உரிமையாளர் கார்த்திகேயன் மாயமான மீனவர்களையும், படகையும் கண்டுபிடித்து தருமாறு ராமேசுவரம் மீன்வளத் துறை அதிகாரியிடம் புகார் அளித்தார். இந்த நிலையில் கடலில் மூழ்கிய மீனவர்களில் ஒருவர் உயிரிழந்துள்ளார். மேலும் 3 மீனவர்களை தேடும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

# குமரி அனந்தனுக்கு தகைசால் தமிழர் விருது; ரூ.10 லட்சம் காசோலை

சென்னை, 01 ஆகஸ்ட் 2024: குமரி அனந்தனுக்கு தகைசால் தமிழர் விருது வழங்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

இதுகுறித்து தமிழக அரசு இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாட்டிற்கும் தமிழினத்தின் வளர்ச்சிக்கும் மாபெரும் பங்காற்றியவர்களைப் பெருமைப்படுத்தும் வகையில், தகைசால் தமிழர் என்ற விருதை உருவாக்கவும், இந்த விருதிற்கான விருதாளரைத் தேர்வு செய்திட ஒரு குழுவை அமைத்திடவும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் கடந்த 2021 - ல் ஆணையிட்டிருந்தார்.

இந்த விருதினை கடந்த 3 ஆண்டுகளில் சங்கரைய்யா, ஆர். நல்லகண்ணு மற்றும் ஆசிரியர் கி.வீரமணி ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ளது. இவ்விருதிற்கான நடப்பாண்டு விருதாளரைத் தேர்வு செய்வதற்காக அமைக்கப்பட்ட குழுவின் கலந்தாலோசனைக் கூட்டம் சென்னை தலைமைச் செயலகத்தில், முதலமைச்சர் தலைமையில் இன்று நடைபெற்றது.

அக்கூட்டத்தில் இளம் வயதிலேயே பொது வாழ்க்கையில் ஈடுபட்டு, சட்டமன்ற உறுப்பினராகவும் நாடாளுமன்ற உறுப்பினராகவும் காந்தி ஃபோரம் அமைப்பின் தலைவரும் இலக்கியச் செல்வராகவும், இலக்கியக் கடலாகவும், எவரோடும் பகை கொள்ளாத பண்பாட்டுச் செம்மலாகவும் விளங்கும் குமரி அனந்தனை பெருமைப்படுத்தும் வகையில் இவ்வாண்டிற்கான தகைசால் தமிழர் விருதுக்கு அவரது பெயர் பரிசீலிக்கப்பட்டு அவருக்கு இவ்விருதினை வழங்க முடிவு செய்யப்பட்டது.

'தகைசால் தமிழர் விருது'க்கு தேர்ந்தெடுக்கப்பட்ட குமரி அனந்தனுக்கு, பத்து லட்சம் ரூபாய்க்கான காசோலையும் பாராட்டுச் சான்றிதழும் வருகிற ஆகஸ்ட் மாதம் 15 ம் நாள் நடைபெறும் சுதந்திர தின விழாவில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலினால் வழங்கப்படும் என்று அரசு செய்தி குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## அதிநவீன ரோபோ உதவியுடன் 6 அறுவைசிகிச்சைகளை ஒரே நாளில் செய்து சாதனைபடைத்திருக்கும் காவேரி மருத்துவமனை



சென்னை, 01 ஆகஸ்ட் 2024: பன்முக சிறப்பு பிரிவுகளில் சிகிச்சை வழங்கும் தமிழ்நாட்டின் முன்னணி மையமாகத் திகழும் காவேரி மருத்துவமனை, உயர்நேர்த்தியான மருத்துவ சிகிச்சைக்கான தனது பயணத்தில் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லை எட்டியிருப்பதை இன்று பெருமிதத்துடன் அறிவித்திருக்கிறது. இம்மருத்துவமனை ஒரே நாளில் ரோபோ உதவியுடன் ஆறு அறுவைசிகிச்சைகளை வெற்றிகரமாகச் செய்திருக்கிறது. நோயாளிகளுக்கு சிறப்பான சிகிச்சை விளைவுகள் கிடைப்பதை உறுதிசெய்ய அதிநவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதற்கான அதன் உறுதிப்பாட்டை இந்நிகழ்வு அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. இந்த நிகழ்வின் மூலம் இம்மருத்துவமனை ரோபோ-உதவியுடன் 100க்கும் மேற்பட்ட அறுவைசிகிச்சைகளை இதுவரை செய்து, மேம்பட்ட அறுவைசிகிச்சை சாதனையில் ஒரு புதிய அளவுகோலை நிலைநாட்டியிருக்கிறது.

காவேரி மருத்துவமனையில் பயன்படுத்தப்படும் அதிநவீன டாவின்சி 4வது தலைமுறை ரோபோ சாதனம், அதன் துல்லியமான மற்றும் குறைந்தபட்ச ஊடுருவல் செயல்திறன்களுக்கு உலகளவில் புகழ்பெற்றதாகும். இந்த மேம்பட்ட தொழில்நுட்பம், அறுவைசிகிச்சை நிபுணர்களுக்கு அதிக துல்லியத்துடன் சிக்கலான மற்றும் நுட்பமான மருத்துவ செயல்முறைகளை வெற்றிகரமாக மேற்கொள்ள உதவுகிறது. அறுவைசிகிச்சைக்குப் பிறகு நோயாளி இயல்புநிலைக்கு வரும் காலஅளவை இது குறைப்பதுடன் நோயாளிக்கு சிறப்பான சிகிச்சை அனுபவத்தை மேம்படுத்தி வழங்குகிறது. மேம்பட்ட ரோபோடிக் அறுவைசிகிச்சை குறித்து, கல்லீரல், பல உறுப்பு மாற்று அறுவைசிகிச்சை, ரோபோடிக் ஜிஐ மற்றும் கல்லீரல் கணைய பித்தக்கால்வாய் அறுவைசிகிச்சை துறையின் இயக்குநர் டாக்டர் சுவாமிநாதன் சம்பந்தம் கூறியதாவது: "ரோபோ உதவியுடன் செய்யப்படும் அறுவைசிகிச்சை செயல்முறையானது, அறுவைசிகிச்சை நிபுணரின் கைகள் எட்ட இயலாத நிலையிலுள்ள மிக நுட்பமான உடலுறுப்புகளுக்கான சிக்கலான சிகிச்சை நேர்வுகளை நாங்கள் அணுகும் முறையில் ஒரு புரட்சியை ஏற்படுத்தியுள்ளது. சிக்கலான இடத்தில் இருந்தாலும் ரோபோ சாதனத்தின் கைகளது இயக்கத்தை அறுவைசிகிச்சை நிபுணர்களால் கட்டுப்படுத்த முடியும் என்பதால் இதன் மூலம், எட்டுவதற்கு மிக சிரமமான பகுதிகளுக்கும் சென்று சிக்கலான அறுவைசிகிச்சை செயல்முறைகளை நாங்கள் வெற்றிகரமாக செய்ய எங்களால் முடிகிறது."

ரோபோ சாதனத்தின் மணிக்கட்டுகளை 360 டிகிரி நகர்த்த இயலும், இதன் மூலம் சிக்கலான பித்தப்பை அகற்றல், குடலிறக்கத்தை சரிசெய்தல், சிறுநீரக மாற்று அறுவைசிகிச்சை, கருப்பை நீக்கம், தானமளிப்பவரிடமிருந்து கல்லீரலை வெட்டி எடுத்தல் மற்றும் புற்றுநோயியல் அறுவைசிகிச்சைகள் போன்ற சிக்கலான அறுவைசிகிச்சைகளை இணையற்ற துல்லியத்துடன் செய்ய இந்த சிறப்பம்சம் அறுவைசிகிச்சை நிபுணர்களுக்கு உதவுகிறது. "ரோபோடிக் அறுவைசிகிச்சைகள் மருத்துவமனையில் நோயாளிகள் தங்கியிருக்கும் காலத்தை 50% குறைப்பதாகவும் நிரூபிக்கப்பட்டுள்ளது; மற்ற அறுவைசிகிச்சை முறைகளுடன் ஒப்பிடும்போது நோயாளிகள் வழக்கமான இயல்பு வாழ்க்கைக்கு விரைவாக திரும்ப முடியும். அறுவைசிகிச்சை நிபுணர்கள், மயக்க மருந்து நிபுணர்கள் மற்றும் செவிலியர் குழுவுடன் ஒருங்கிணைந்து ஒரு சிறுநீரக மாற்று அறுவைசிகிச்சை உட்பட ஒரே நாளில் 6 அறுவைசிகிச்சைகளை நாங்கள் வெற்றிகரமாக செய்து ஒரு புதிய சாதனையைப் படைத்திருக்கிறோம்," என்று டாக்டர் சுவாமிநாதன் மேலும் கூறினார்.

"தமிழகத்தில் காவேரி மருத்துவமனை, மிகவும் குறைவான கட்டணத்தில் ரோபோடிக் அறுவைசிகிச்சை விருப்பத்தேர்வுகளை வழங்கும் ஒரு மருத்துவ மையமாக தனிச்சிறப்புடன் திகழ்கிறது. இந்த முன்முயற்சியானது, உலகத் தரம் வாய்ந்த சிகிச்சை சேவைகளை அனைவருக்கும் குறைவான கட்டணத்தில் வழங்குவது மீது இம்மருத்துவமனை கொண்டிருக்கும் நோக்கத்துக்கு இணக்கமாக இருக்கிறது. மேம்பட்ட மருத்துவ சிகிச்சைகள் அதிக எண்ணிக்கையிலான மக்களும் பெறக்கூடியவை என்பதை இது உறுதிப்படுத்துகிறது. ரோபோ சாதன உதவியுடன் மேற்கொள்ளப்படும் அறுவைசிகிச்சையின் மூலம், நோயாளிகள் வேகமாக குணமடையலாம்; குறைவான வலியே இதில் இருக்கும் மற்றும் மருத்துவமனையில் தங்கும் காலமும் வெகு குறைவாக இருக்கும். ரோபோ சாதன உதவியுடன் 100-க்கும் மேம்பட்ட அறுவைசிகிச்சைகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டிருக்கும் நிலையில், எங்கள் அறுவைசிகிச்சை நிபுணர்கள் மற்றும் அர்ப்பணிப்புள்ள மருத்துவ நிபுணர்களின் குழு, எங்கள் நோயாளிகளுக்கு சிறப்பான சிகிச்சை விளைவுகள் கிடைப்பதை உறுதிசெய்கிறது," என்கிறார் காவேரி மருத்துவமனைகளின் இணை நிறுவனரும், செயல் இயக்குனருமான டாக்டர் அரவிந்தன் செல்வராஜ்.

மிஸிஸ்ரீகிமி வழிகாட்டல்களின்படி, பெரும்பாலான சுகாதார காப்பீட்டு நிறுவனங்கள், ரோபோ அறுவைசிகிச்சைகளுக்கு காப்பீடு வசதியை வழங்குகின்றன; இதன் காரணமாக இந்த மேம்பட்ட அறுவைசிகிச்சைகளை அதிக எண்ணிக்கையிலான நபர்கள் பெறும் வசதி உயர்ந்திருக்கிறது.

## ரூ. 47- கோடியில் 53 காவலர் குடியிருப்புகள்: 6 காவல் நிலையக் கட்டடங்கள்; முதல்வர் ஸ்டாலின் திறந்தார்



சென்னை, 01 ஆகஸ்ட் 2024: முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று தலைமைச் செயலகத்தில், காவல்துறை சார்பில் 47 கோடியே 51 லட்சத்து 20 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 53 காவலர் குடியிருப்புகள், 6 காவல் நிலையக் கட்டடங்கள் மற்றும் 2 காவல் துறை கட்டடங்கள் ஆகியவற்றை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

திருச்சி மாவட்டம் ஜெம்புநாதபுரத்தில் 3 கோடியே 97 லட்சத்து 95 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 29 காவலர் குடியிருப்புகள் மற்றும் உறையூரில் 3 கோடியே 1 லட்சத்து 51 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 24 காவலர் குடியிருப்புகள், என 6 கோடியே 99 லட்சத்து 46 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 53 காவலர் குடியிருப்புகள்;

சென்னை மாவட்டம் டி.பி சத்திரம் மற்றும் ஜெ.ஜெ நகரில் 3 கோடியே 70 லட்சத்து 14 ஆயிரம் ரூபாய் செலவிலும், புதுக்கோட்டை மாவட்டம் ரெகுநாதபுரத்தில் 78 லட்சத்து 18 ஆயிரம் ரூபாய் செலவிலும், திருவாரூர் மாவட்டம் மன்னார்குடியில் 1 கோடியே 6 லட்சத்து 29 ஆயிரம் ரூபாய் செலவிலும் கட்டப்பட்டுள்ள 4 காவல் நிலையங்கள்,

திருச்சி மாவட்டம் பீமா நகரில் 2 கோடியே 70 லட்சத்து 18 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த அமர்வு நீதிமன்ற காவல் நிலையம் மற்றும் சிந்தாமணியில் 3 கோடியே 19 லட்சத்து 9 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த கோட்டை காவல் நிலையம், என 11 கோடியே 43 லட்சத்து 88 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 6 காவல் நிலையங்கள்;

செங்கல்பட்டு மாவட்டம் மேலக்கோட்டையூரில் இரண்டாம் கட்டமாக 17 கோடியே 43 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள காவலர் பொதுப்பள்ளி மற்றும் தென்காசி மாவட்டம் தென்காசியில் 11 கோடியே 64 லட்சத்து 36 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மாவட்ட காவல் அலுவலகம், என 29 கோடியே 7 லட்சத்து 86 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 2 காவல் துறைக் கட்டடங்கள்;

என மொத்தம் 47 கோடியே 51 லட்சத்து 20 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 53 காவலர் குடியிருப்புகள், 6 காவல் நிலையங்கள் மற்றும் 2 காவல் துறை கட்டடங்கள் ஆகியவற்றை முதலமைச்சர் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், சென்னை பெருநகர காவல் ஆணையர் ஆ. அருண், காவலர் வீட்டுவசதி கழகத்தின் தலைவர் வினித் தேவ் வான்கேடே ஆகியோர் கலந்து கொண்டனர்.

## 5 மெ.வா. மேற்கூரை சோலார் மின்சக்தி மற்றும் பசுமை ஹைட்ரஜன் ஒருங்கிணைப்பின் வழியாக நிலைப்புத்தன்மையை மேம்படுத்தும் ஹை டெக் பைப்ஸ் லிமிடெட்

Hi-TECH
STEEL PIPES

சென்னை, 01 ஆகஸ்ட் 2024: இந்தியாவில் முன்னணி ஸ்டீல் பைப் நிறுவனங்களுள் ஒன்றான ஹைடெக் பைப்ஸ் லிமிடெட் அதன் உற்பத்தி தொழிலகங்களில் கார்பன் உமிழ்வை குறைப்பதற்கான ஒரு நடவடிக்கையாக தொழிலகத்தின் மேற்கூரையில் கூடுதலாக 5 மெ.வா. திறனுள்ள சூரியஒளி மின்சார நிலையம் அமைக்கப்படுவதையும் மற்றும் பசுமை ஹைட்ரஜன் கேஸ் உற்பத்தி மற்றும் தொழிலகத்திலேயே உள்ளார்ந்த நுகர்வுக்கான நடவடிக்கையையும் அறிவித்திருக்கிறது. பூஜ்ஜிய கார்பன் உமிழ்வு என்ற இலக்கை 2070-ம் ஆண்டுக்குள் எட்ட வேண்டும் என்ற செயல்திட்டத்தை இந்திய அரசு உருவாக்கி செயல்படுத்தி வருகிறது (2030-ம் ஆண்டுக்குள் 30% முதல் 35% வரை). இந்த இலக்கை அடைவதற்கு சுற்றுச்சூழலுக்கு தோழமையான பிற நடவடிக்கைகளோடு சேர்த்து சூரிய ஒளி மற்றும் காற்றின் மூலம் பசுமை மின்சக்தி உருவாக்கப்படுவதை இந்திய அரசு ஊக்குவித்து வருகிறது. 2023 ஜனவரி 4ம் தேதியன்று தேசிய பசுமை ஹைட்ரஜன் மிஷன் என்ற திட்டத்திற்கும் இந்திய அரசு ஒப்புதல் அளித்திருந்தது. பசுமை ஹைட்ரஜன் மற்றும் அதன் துணைப் பொருட்களுக்கான உற்பத்தி, பயன்பாடு மற்றும் ஏற்றுமதிக்கு இந்தியாவை ஒரு உலகளாவிய முதன்மை மையமாக ஆக்குவது இச்செயல்திட்டத்தின் நோக்கமாகும். மின்சக்தியில் பிறரை சாராமல், தற்சார்புள்ள நாடாக இந்தியா உருவாவதற்கும் மற்றும் பொருளாதாரத்தின் முக்கிய துறைகளில் கார்பன் உமிழ்வு முற்றிலும் அகற்றப்படுவதற்கும் இச்செயல்திட்டம் உதவும். மாண்புமிகு பிரதமர் நரேந்திர மோடி அவர்களால் 2030 மற்றும் 2070-ம் ஆண்டுகளுக்குள் எட்டப்படுவதற்காக நிர்ணயிக்கப்பட்டுள்ள முக்கியமான காலநிலை இலக்குகள் திட்டத்திற்கு இணக்கமானதாக, தனது உற்பத்தி தொழிலகங்களில் 2033-ம் ஆண்டுக்குள் கார்பன் உமிழ்வை முற்றிலுமாக நீக்குவதற்கான நடவடிக்கையை ஹைடெக் பைப்ஸ் எடுத்திருக்கிறது (2030-ம் ஆண்டுக்குள் 60%). மேற்கொள்ளப்பட திட்டமிடப்பட்டிருக்கும் அனைத்து நடவடிக்கைகளின் வழியாக, இந்நிறுவனத்தின் பசுமை ஆற்றல் கொள்முதல் என்பது இந்நிறுவனத்தின் மொத்த ஆற்றல் தேவையில் ஏறக்குறைய 30% பங்களிப்பை வழங்கும். அதாவது 13.50 மெ.வா. ஆற்றல் பசுமை ஆதாரங்களிலிருந்து பெறப்பட்டு பயன்படுத்தப்படும். கார்பன் உமிழ்வு குறைக்கப்படுவதன் வழியாக மின்சாரத்திற்கான செலவும் மிச்சப்படுத்தப்படும். சமீபத்தில் ஒரு குறித்த காலஅளவிற்குள் செயல்படுத்தப்படும் பசுமை ஹைட்ரஜன் செயல்திட்டத்திற்கு புதுப்பிக்கத்தக்க ஆற்றலில் ஒரு முன்னணி நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை ஹைடெக் பைப்ஸ் மேற்கொண்டிருக்கிறது. பசுமை ஹைட்ரஜனின் பல்வேறு அம்சங்களில் தனது ஆழமான ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு திறன்களின் மூலம் பெற்றிருக்கும் தனது விரிவான நிபுணத்துவத்தை இந்த சப்ளையர் நிறுவனம் இச்செயல்திட்டத்தில் பயன்படுத்தும். மாற்று எரிசக்தி ஆதாரங்களுக்கான இந்தியாவின் செயல்திட்டத்தில் இக்கூட்டாண்மை ஒரு முக்கியமான முன்னேற்ற நடவடிக்கையாக இருக்கும் என்று ஹைடெக் நம்புகிறது. பசுமை ஹைட்ரஜன் கேஸ் உற்பத்திக்காக நிறுவப்படும் திறன் 2.4 இலட்ச கன மீட்டர் என்ற அளவில் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.